# Gospel Truth
# காஸ்பெல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 52 | International Editor : MICHAEL. W. SMITH | இதழ் - 52


## ஏழு முறை

எகிப்தை விட்டு வெளியேறி 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தபின் இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை சுதந்தரித்துக் கொண்டனர். அவர்கள் அதற்காக யோர்தான் நதியை கடக்க வேண்டியதாயிருந்தது. அவர்களுடைய விசுவாசம் கீழ் படிதலும் தொடர்ந்து சோதிக்கப்பட்டு கொண்டே இருந்தது. பல கடினமான சூழல்கள் இக்கட்டு நெருக்கங்கள் முறுமுறுப்புகள் அவிசுவாசங்கள் நேர்ந்த போதும் தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் மட்டுமே அவர்கள் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் பிரவேசிக்க முடிந்தது. சுதந்தரிக்கப் போகிற தேசமோ பல பெரிய மதில் சூழ்ந்த பட்டணங்களாலும் இராஜ்யங்களாலும் நிறைந்தது. 40 பட்டணங்களால் சூழப்பட்ட எரிகோ மதிலை வந்து எட்டிய இஸ்ரவேலருக்கோ அதை கடப்பது சாதாரண காரியம் அல்ல .

தேவன் அவர்களை கைவிடவில்லை. கர்த்தர் யோசுவாவை நோக்கி: இதோ, எரிகோவையும் அதின் ராஜாவையும் யுத்தவீரரையும் உன் கையில் ஒப்புக்கொடுத்தேன் (யோசுவா 6 : 2).தேவனாகிய கர்த்தர் யோசுவாவுக்கு கட்டளையிட்டதாவது: எரிகோ கோட்டையை சுற்றி ஆறு நாட்கள் தினம் ஒரு முறை சுற்றி வரவேண்டும் .ஏழாவது நாளோ ஏழு முறை சுற்றிவர வேண்டும் என்றார். அந்த ஏழாவது முறை சுற்றி வரும்போது ஆசாரியர்களை எக்காளங்களை எடுத்து ஊதும் போது ஜனங்கள் ஆர்ப்பரிக்க கடவர்கள். அப்போது அந்த கோட்டை தகர்க்கப்படும்.

தேவன் தங்களுக்கு கட்டளையிட்டபடியே இஸ்ரவேலர் யாவரும் கீழ்ப்படிந்தனர். ஒவ்வொரு நாளும் கோட்டையை சுற்றி வந்தார்கள். தேவனுடைய திட்டத்தை சரியாக செய்தார்கள். ஆறு நாட்களும் செய்தார்கள். ஒரு மாற்றமும் இல்லை. ஒன்றும் பலனளிக்காதது போல காணப்பட்டது.

ஏழாவது நாளோ அவர்களுடைய விசுவாசத்தின் பலன் அவர்கள் கைக்கு நேரிட்டது. முடியாததை தேவன் முடிய செய்தார். ஏழாவது நாள் எக்காளம் ஊதப்படும் போது ஜனங்கள் ஆர்ப்பரித்தார்கள். கோட்டை தகர்ந்து போனது. பட்டணம் கொள்ளையிடப்பட்டது . ஜெயம் பெற்றார்கள்.

இராணுவத்தின் யுத்த தந்திரங்களில் இல்லாத ஒரு யுக்தி, அது தேவனால் தரப்பட்ட யோசனை. அதை விசுவாசித்து கீழ்ப்படிந்த போது தேவன் ஜெயத்தை கொடுத்தார். வேதாகமம் முழுவதும் கீழ்படிதலுக்கான பிரதிபலிப்பை காண முடியும். தேவன் தம்முடைய தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றும்படி ஜனங்களிடத்திலே விசுவாசத்தையும் கீழ்ப்படிதலையும் பயிற்சி அளித்தார். பல சமயங்களில் தேவனுடைய கட்டளைகள் மனுஷனுடைய எண்ணங்களுக்கு சரியாக ஏற்றுக் கொள்ள முடியாததாய் காணப்பட்டாலும் முழுவதுமாக தேவனிடம் நம்மை அர்ப்பணிக்கும் போது உன்னதமான அவருடைய சித்தம், வல்லமை சரியான சமயத்தில் வாய்க்கும்.


ஆறு நாட்கள், ஆறு மாதங்கள், ஆறு ஆண்டுகள் ஆனாலும் தேவனுக்குள் விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருங்கள். தேவன் அமைதியாய் இருக்கிறார் என்று எண்ண வேண்டியதில்லை. காத்திருக்குதல் நம்முடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் இன்னும் வலுப்படுத்தும். தேவனுடைய திட்டம் நிறைவேறும் ஏழாவது நாள் கண்டிப்பாக வரும். 7 என்பது வேதத்திலே பரிபூரணமான ஒன்றைக் குறிக்கிறது. தேவனுடைய அநாதி தீர்மானங்களும் ,திட்டங்களும் நம்முடைய எண்ணங்களுக்கும், புரிந்து கொள்ளுதலுக்கும் அப்பாற்பட்டது .



**காத்திருக்குதல் நம்முடைய விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் இன்னும் வலுப்படுத்தும். தேவனுடைய திட்டம் நிறைவேறும்**


| | | | | |
|---|---|---|---|---|
| தலையங்கம் | வேதபாட வழிகாட்டி<br>கீழ்ப்படிதல் | துணைக் கட்டுரை<br>கீழ்ப்படிதலுள்ள வாழ்வு | கேள்வி பதில்<br>தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலில் வளர்த்தல் | ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை<br>திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு |
| 3 | 4 | 5-6 | 7 | 8 |

# வேதாகமம்,




## நமக்கு போதிப்பது என்ன..... ?

**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ; மத் 24 : 35

**அன்பு**
மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23, 1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**
அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**
யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4, எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**
லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1 :15-16 ; தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ; 1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ; வெளி 18 : 2-4

**நியமங்கள்**
மத் 28 : 19-20 ; 26 : 26-30 ; 1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4 : 18, ஏசா 53 : 4,5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**
மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ; 1 கொரி 7 : 10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ; உபா 22 : 5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28 ,29 ; 2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4 : 23,24 ; எபே 5 : 19 ; 2 கொரி 3 : 17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16 : 15

ஆயினும் நாம் ஏழாவது நாளுக்குள் கடந்து செல்லும் வரை பொறுமையோடு காத்திருப்போம். இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோவில் தேவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்தது போலும், நாகமான் தேவனுடைய மனுஷனுடைய சொல்லுக்கு கீழ்படிந்தது போலவும், நம்முடைய கீழ்படிதல் இருக்க வேண்டும். நாகமான் எனும் சீரிய படைத்தலைவன் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டிருந்தான். அவர் குணமாகும்படி தேவனுடைய மனுஷனாகிய எலியா, நாகமான் ஏழுதரம் யோர்தான் நதியிலே மூழ்கி எழும்பினால் அவருடைய குஷ்டரோகம் நீங்கி சொஸ்தமாவார். 2 இராஜா 5: 10 – 14 ல் நாகமான், உக்கிரத்தோடே இந்த யோர்தானைக் காட்டிலும், மற்ற நதிகள் நல்லதல்லவோ என்று சொல்லி திரும்பிப் போனான் அவன் எதிர்பார்த்தபடி தேவனுடைய மனுஷன் நாகமானை தொட்டு அற்புத சுகம் கிடைக்கவில்லை.

அவனுடைய ஊழியக்காரர் மீண்டும் இந்த சிறிய காரியத்தை செய்யும் என்று வற்புறுத்தியதால் நாகமான் தன்னை தாழ்த்தி இறங்கி போய் ஸ்நானம் பண்ணினான். அவன் ஏழு தரம் முழுகின போது அவன் மாம்சம் ஒரு சிறு பிள்ளையின் மாம்சத்தை போல மாறி அவன் சுத்தமானான். தேவனுடைய வழிகள் மனுஷனுடைய நினைவுகளுக்கு அப்பாற்பட்டது. கீழ்ப்படிதல் மிக முக்கியமானது. நாகமான் தன்னை தாழ்த்தி கீழ்படிந்த போது தான் சுகம் கிடைத்தது. யோர்தானின் தண்ணீர் அல்ல. தேவனுடைய வார்த்தையும் கீழ்ப்படிதலும் எலியாவின் மற்றொரு சம்பவமும் இதை எடுத்துரைக்கிறது. பஞ்ச நாட்களுக்குப் பிறகு எலியா மழை பெய்யும் படி கருத்தாய் ஜெபம் செய்தார். தன் ஊழியக்காரனை நோக்கி, நீ போய் சமுத்திர முகமாய் பார் என்றான். ஒவ்வொரு முறையும் அவன் போய் பார்த்தான். ஒன்றும் இல்லை என்றான் 1 இராஜா 18 : 43 – 44. எலியா தொடர்ந்து ஜெபித்தார். ஆனால் வேலைக்காரனுடைய பதிலோ வானம் தெளிவாக இருக்கிறது என்பதே. ஆனாலும் எலியா விடவில்லை ஏழாவது முறை தன் ஊழிய காரனை அனுப்பி சமுத்திர முகமாய் பார்க்க சொல்லும்போது இதோ சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனை சிறிய மேகம் எழும்புகிறது என்றான். உடனே எலியா ஆகாபை நோக்கி வானம் மேகங்களினாலும் காற்றினாலும் கறுத்து பெருமழை உண்டாக போகிறது இரதத்தை பூட்டி போய்விடும் என்றார். 1 இராஜா 18 : 45 அப்படியே ஆயிற்று. ஆறாவது முறை எலியா ஜெபத்தை நிறுத்தி இருந்தால் என்ன நடந்திருக்கும்? தேவன் நம்முடைய சமயத்திற்கு கிரியை செய்கிறவர் அல்ல. ஆனால் நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். எரிகோ கோட்டை, நாகமான் பெற்ற சுகம், மழை பெய்தது இவையெல்லாம் ஏழாவது முறை நடந்ததே. 7 என்பது ஒரு அடையாளம். மேலும் அது தேவனுடைய நேர்த்தியான செய்கையாயாருக்கிறது. விசுவாசமும், கீழ்படிதலும் எங்கே இருக்கிறதோ அங்கே தேவகிரியை வெளிப்படும்.

நாம் காண்கிற அல்லது உணர்கிற சோதனை, பாடுகள், குழப்பம் வேதனைகளுக்கு மத்தியில் தேவன் நிறைவேற்ற வேண்டிய நோக்கம் நிறைவேறும் வரை பொறுமையாக விசுவாசத்தில் நிலைத்திருப்போம். நம்முடைய சொந்த வாழ்வில் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய சமயங்களில் தேவனுடைய வாக்குத்தத்தங்களை பற்றி கொண்டு விசுவாசிக்க வேண்டும். நாம் ஆறு முறையோடு நின்று விடக்கூடாது. ஜெபம், விசுவாசம், கீழ்படிதல் ஆனது தேவனுடைய ஏழாவது முறையை நேர்த்தியாக நிறைவேற்ற வல்லமை உள்ளது. எவ்வளவு நாள் காத்திருக்க வேண்டும் அல்லது எவ்வளவு கடினமானது நம் பயணம் என்பதை விட தேவ திட்டம் பெரியது. அவருடைய நோக்கம் நாம் விசுவாசித்து கீழ்ப்படியும்போது மாத்திரமே நிறைவேறும். ■


*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*



**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

Editorial

# ஆசிரியரின் தலையங்கம்

நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள் (யோவான் 15 : 10).

ஒருவரிலொருவர் பட்சமாயிருந்து அன்பு கூறுகிற உறவு என்பது கனத்திற்குரியது. பிதாவின் சித்தத்தை நாம் வாழ்வில் நிறைவேற்றும்படியாக அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும் என்று இயேசு நமக்கு கட்டளையிடுகிறார். தேவனுடைய அன்பை தவிர பெரிதானது வேறு எங்கும் இல்லை. ஜனங்கள் நாடும் அடைக்கலம், சமாதானம் மற்றும் விசுவாசம் யாவும் தேவனிடத்தில் இருந்து வருகிறது. ஆனால் ஒரு சிலரே இந்த கனத்திற்குரிய உறவில் நிலைத்திருக்கின்றனர். உண்மையிலேயே நாம் தேவனுடைய அன்பையும் வாக்குத்தத்தங்களையும் பெற விரும்பினால் கர்த்தருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ள கடவோம்.

இந்த இதழின் தலைப்பு கீழ்ப்படிதல். நாம் சுயத்தை விட்டுவிட்டு கர்த்தருக்கு கீழ்படிவோம். நாம் நம்முடைய சிந்தனைகளையும் முக்கிய நோக்கங்களையும் பின்பற்ற விரும்பினால் முதலாவது அதை விட்டுவிட்டு தேவ சித்தத்தை அறிந்து கொள்ள முயற்சிப்போம். வாழ்வின் எல்லா நிலைகளிலும் கீழ்படிகிறவர்களே தேவனுக்கு தேவை. கீழ்ப்படிதலினால் மட்டும் தேவனை தெரியப்படுத்த முடியாது. நாம் எளிதாக ஒருவருடைய கீழ்படியாமையையும் கீழ்ப்படிதலையும் நியாயப்படுத்த முடியும். முழு  சத்தியத்திற்கும் கீழ்ப்படிகிறவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள். வேதம் நமக்கு போதிப்பது முற்றிலுமானது. புறக்கணிக்கக் கூடாது.

கீழ்படிதலானது நமது சந்தர்ப்பம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வரும் நாமும் நம் சபை ஐக்கியமும் கர்த்தருக்கு கீழ் படுகிறோமா என்று சிந்தித்துப் பாருங்கள் நாம் முற்றிலும் தேவனுக்கு கீழ்படிகிறோமா? நாம் வாசித்து புரிந்து கொண்ட எல்லாம் சத்திய வசனங்களுக்கும் கீழ்ப்படிந்து அதன்படி பேசி வாழ்ந்து உடை அணிந்து பழகுகிறோமா? நம்மை நாமே கேள்வி கேட்கலாமா? கர்த்தாவே நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர்

எழுதப்படுகிற வார்த்தைக்கு மேலானது கீழ்ப்படிதல். தேவனுடைய ஆவியானவரே சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். அவரே வழிகாட்டி. தேவ ஆவியானவருக்கு நாம் எப்படி பதிலளிக்க வேண்டும்? ஆவியானவரின் எச்சரிப்புக்கு உடனே செவிசாய்க்க வேண்டுமா? இல்லை எனில் ஆவியானவர் கிரியை செய்ய முடியாதபடிக்கு நாம் இரக்கமற்றவர்களும் மனசாட்சிகளை குற்றம் சாட்டப்பட்டவர்களாய் இருக்க நேரிடும். செவி சாய்க்க மனதில்லாமல் போனால் அனுதினமும் தேவனோடு நடக்கப் பழக செவித்தினவுள்ளவர்களாகி விடுவோம். வாழ்வின் ஒரு பகுதியில் கீழ்படியாமல் போனால் அது மற்ற எல்லா பகுதியையும் பாதிக்கும். நாம் வெற்றி சிறந்த பல காரியங்களில் தோல்வியுற ஆரம்பித்தால் அது கீழ்படியாமையின் விளைவு .ஆகவே தேவ ஆவியானவர் இடைபடும் போது உடனே செவி சாய்த்து கர்த்தருக்கு வாழ்வை ஒப்புக்கொடுப்போம்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக**

தேவனை சேவிப்பது எளிதான கீழ் படிதல்

> தேவன் எங்கே போக நம்மை அழைக்கிறாரோ அங்கே செல்லுவோம்
>
> அவர் என்ன செய்ய சித்தம் கொண்டாரோ அதை செய்வோம்
>
> அவர் என்ன பேச சித்தம் கொண்டாரோ   அதையே   பேசுவோம்



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : கீழ்ப்படிதல்

**வேத வாசிப்பு :** நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.யோவான் 14 : 15

**வரையறை :** கீழ்ப்படிதல் என்பது செவிசாய்ப்பது ஒருவருடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு கட்டளைகளையும் பிரமாணங்களையும் கைக்கொண்டு உடன்படுவது

**செய்திச் சுருக்கம் :** தேவன் மேலுள்ள அன்புக்கும் அவருடைய வார்த்தைக்கு கீழ்படிவதற்கும் ஒரு முக்கியமான தொடர்பு உண்டு. தெய்வீக வாழ்வை வாழ தேவ சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஆவியானவரின் வழிகாட்டுதலோடு நடப்பது அவசியம். கீழ்ப்படிதல் ஆசீர்வாதத்தையும் நித்திய வாழ்வையும் பெற்று தரும். அதே சமயம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளின் மேல் தேவகோபாக்கினை வரும். முடிவு தேவனிடத்தில் இருந்து பிரிக்கப்படுவோம்.

### I.கீழ்ப்படிதலின் அழைப்பு

A. உபா 11 : 1 கர்த்தருடைய கற்பனைகளை கைக்கொள்வாயாக

B. யோவான் 14 : 15 என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்.

### II. கீழ்ப்படிதலுக்கான நோக்கம்

A.யோவான் 14 : 23 ஒருவன் என்னில் அன்பாய் இருந்தால்

B.யோவான் 14 : 24 என்னில் அன்பாயிராதவன்

### III. இயேசுவின் போதனைகள்

A. மத்தேயு 7 : 24– 27 புத்தியுள்ள , புத்தியற்ற மனுஷன்

B.லூக் 6 : 46 நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற் போகிறதென்ன

C.மத் 21 : 28 – 31 குமாரர்கள் பற்றிய உவமை

### IV.தேவன் பேரில் விசுவாசமும் கீழ்ப்படிதலும்

A. யாக் 4 : 7 தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்.

B. லூக் 22 : 41 – 42 என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே

C. நீதி 3 : 5 – 6 கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து

### V. கீழ்ப்படிதலின் ஆசீர்வாதம்

A. யாத் 23 : 22 தேவன் பாதுகாப்பவர்.

B. ஏசா 1 : 19 தேசத்தின் நன்மையை புசிப்பீர்கள்.

C. அப் 5 : 32 கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின பரிசுத்த ஆவி

D. யோவான் 8 : 51 என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை

### VI.கீழ்ப்படிதலின் உதாரணங்கள்

A. இயேசு : பிலி 2 : 8 மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி

B. ஆபிரகாம் : ஆதி 22 :1 –18 தன் குமாரனை தகன பலியிட ஆயத்தமானான்

C. பவுல் : அப் 26 : 19 பரமதரிசனத்திற்கு கீழ்படியாதவனாயிருக்கவில்லை

D. நோவா : ஆதி 6 : 14, 22 தேவன் தனக்கு கட்டளையிட்ட படியெல்லாம் அவன் செய்து முடித்தான்.

### VII.கீழ்ப்படியாமையின் விளைவு

A. உபாகமம் 8 : 20 கீழ்ப்படியாமல் போவதினால் அழிவீர்கள்

B. 2 தெச 1 : 8 சுவிசேஷத்திற்கு கீழ்படியாதவர்களுக்கு ஆக்கினையை செலுத்த

C. எபேசி 5 : 5 – 6 தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை

### VIII. கீழ்ப்படியாமையின் உதாரணங்கள்

A. ஆதாம் மற்றும் ஏவாள் : ஆதி 3 : 3 –6 முதல் கீழ்படியாமை என்னும் பாவம்

B. சவுல் : 1 சாமுவேல் 15 : 3 – 23 பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம் (வ 22)

C. கீழ்ப்படியாத தீர்க்கதரிசி : 1 இராஜா 13 : 26 சிங்கம் அவனை முறித்துக் கொன்று போட்டது

D. யோனா : யோனா 1 : 3 கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி

E. இஸ்ரவேலர் : எரேமியா 6 : 16 நாங்களும் அதிலே நடக்க மாட்டோம் என்கிறார்கள்

### IX.கீழ்ப்படிகிற பிள்ளைகளாய் வாழுதல்

A. 1 பேது 1 : 13– 14 கீழ்ப்படிதலுக்கும்

B. 1 யோவான் 3 : 24 கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான்.

C. எபேசியர் 2 : 2 கீழ்படியாமையின் பிள்ளைகளிடத்தில்

### X.கீழ்ப்படிதல் குறித்த போதனைகளும் கடைபிடித்தலும்

A. மத்தேயு 28 : 19, 20 நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி

B. 2 கொரி 2 : 9 நீங்கள் எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களே

C. அப் 5 : 29 மனுஷருக்கு கீழ்ப்படிகிறதை பார்க்கிலும் தேவனுக்கு கீழ்படிகிறதே அவசியமாய் இருக்கிறது

### XI.கீழ்ப்படிதலின் செயல்

A. ரோமர் 6 : 16 எதற்கு கீழ்ப்படிதலின்படி உங்களை அடிமைகளாக ஒப்பு கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள்

B. சங் 119 : 59, 60 தாவீது தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளும்படி தீவிரித்தேன் என்கிறார்

C. எபி 2 : 1–3 கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாக கவனிக்க வேண்டும்.

### முடிவு :

நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

– 1 யோவான் 5 : 3

# கீழ்படிதல் நிறைந்த வாழ்க்கை

ஆசீர்வாதமான வாழ்வுக்கும் நித்திய வெகுமானத்திற்கும் தேவனுடைய வழியை தெரிந்து கொள்ளுங்கள்

**கீழ்ப்படிதலின் வாழ்வு என்பது என்ன ஆதியிலே தேவன் மனுஷனை சிருஷ்டித்தபோது அவனுக்கு சுதந்திரம் கொடுத்து தான் சிருஷ்டித்தார் .அன்பு கூறும் அதிகாரத்தையும் கொடுத்தார். கீழ்ப்படிதல் தேவனுடைய வழிகளை தெரிந்து கொண்டு அன்பின் கனிகளை ஈவோம்.**



**கீழ்ப்படிதல் என்பது பயமோ அல்லது அடிமைத்தனமோ அல்ல. அது உண்மையான தேவனுடைய அன்பினால் உண்டாகும் பலன்**

### கீழ்படிதலின் தேவை

தேவனை சேவித்து நித்தியஜீவனை சுதந்தரிக்க நாம் ஒவ்வொருவரும் அவருக்கு கீழ்ப்படியும் வாழ்வை அமைப்போம். பலரும் தேவ சித்தத்திற்கு மாறாக தங்கள் சுய விருப்பத்தை நிறைவேற்ற எண்ணுகிறார்கள். பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக சரியான தேவத்திட்டத்தை நமக்கு அருளியிருக்கிறார். சிருஷ்டிப்பின் தேவன் அவருடைய திட்டமே பரிபூரணமானது. அது மிகுந்த சமாதானத்துக்கு ஏதுவானது. நம்மை நாமே வெறுத்து தெய்வீக வழிகாட்டுதலின்படி நம்மை அர்ப்பணிப்போம். நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறீர்களா?

### முதல் கீழ்படியாமையின் சட்டம்

தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தின் நடுவிலே நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை வைத்தார். அவர் ஆதாம் மற்றும் ஏவாளிடம் ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார் (ஆதி 2 : 17). தேவனாகிய கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்புகளை நேசிக்கவும் நன்மையையும் தீமையையும் எடுத்துக் கொள்ளும் அதிகாரத்தையும் அவர்களிடமே கொடுத்தார். அவர்களுடைய கீழ்படியாமைக்கு முன்பு தேவன் தந்த செழிப்பான வாழ்வை அனுபவித்தார்கள். அவர்களுடைய கீழ்படியாமையினாலே மாம்சத்திலும் ஆவியிலும் மரணம் அவர்களை தேவனை விட்டு பிரித்தது. அந்த பிரிவு தேவ பிரசன்னத்தை நம்மை விட்டு விலக்கிவிடும்.

### உண்மையான அன்பின் அடையாளம் கீழ்ப்படிதல்

ஆதாம் ஏவாளுக்கு தேவன் கட்டளையிட்டது போலவே இஸ்ரவேல் ஜனங்களுக்கும் கட்டளையிட்டார்.நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடைய கட்டளைகளையும், அவருடைய நியாயங்களையும், அவருடைய கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வாயாக (உபாகமம் 11 : 1) .நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் (யோவான் 14 : 15). இயேசு கூறுகிறார். தேவனுடைய கட்டளைகளை கைக்கொண்டு நடப்பதும் ஆவியானவரின் வழி நடத்துதலும் ஒரு கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அவசியமானது. பல தேவ ஜனங்கள் கிறிஸ்துவை தங்கள் வாயினால் அறிக்கையிட்டு இருதயத்தை தூரப்படுத்துகின்றனர். இயேசு கேட்டார் .ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள் (லூக்கா 6 :46).

### உங்களை உற்சாகப்படுத்துவது எது

கீழ்ப்படிதல் என்பது பயமோ அல்லது அடிமைத் தனமோ அல்ல. அது உண்மையான தேவனுடைய அன்பினால் உண்டாகும் பலன் இயேசு கூறுகையில் யோவான் 14 : 23 – 24 ஒருவன் என்மேல் அன்பு கூற விரும்பினால் கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும். என் மீது அன்பு கூறாதவனோ கற்பனைகளைக் கைக்கொள்ள மாட்டான் . உண்மையான அனுபவம் இதுதான்.

### புத்தியுள்ள மற்றும் புத்தி இல்லாத மனுஷன்

என் கட்டளைகளைக் கேட்டு அதின்படி செய்கிறவன் கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்ட புத்தி உள்ள மனுஷன். அதே சமயம் என் கற்பனைகளை கைக்கொள்ளாதவன் மணலில் மேல் கட்டிய புத்தி இல்லாத மனுஷனுக்கு ஒப்பிடுகிறார். பெருங்காற்றும் புயலும் வந்து அந்த வீட்டின் மேல் மோதியும் அது அசைக்கப்படவில்லை. ஆகவே தேவன் நம்மிடத்தில் வாய்ப்பை தருகிறார்.

### அர்ப்பணிப்பின் சவால்

ஒருவருடைய அதிகாரத்திற்கு கட்டுப்பட்டு அதன்படி செய்வதே கீழ்ப்படிதல். உண்மையான கிறிஸ்தவர்கள் தேவனுடைய சித்தம் செய்ய ஒப்பு கொடுக்க வேண்டும். தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் (யாக்கோபு 4 : 7). நம் சுய விருப்பத்திற்கு மேலாக தேவசித்தம் நிறைவேற்றப்பட வேண்டும். பல பெயர் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வு, இலட்சியம், நோக்கம் எதையும் தேவனுக்கு சித்தமானபடி செய்வதில்லை. பல சவால் நிறைந்த சூழல்களிலும் முழுமையான கீழ்ப்படிதல், பூரண சமாதானத்தைக் கொண்டு வரும்.

### விசுவாசம் கீழ்ப்படிதலுக்கு நேராக வழி நடத்தும்.

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி 3: 5–6).

### ஆசீர்வாதம் உங்களை பின்தொடரும்.

தேவனுக்கு கீழ்ப்படிதல் நம் வாழ்வில் ஆசீர்வாதத்தை கொண்டு வரும். அதற்கு அவர்: அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக்



**பரலோக பாக்கியத்தை பற்றி நித்திய ஜீவனுக்கான ஆசீர்வாதத்தை பெற அவருக்கு கீழ்படிவோம்.**

கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள் என்றார் லூக்கா 11 : 28 . ஏசாயா தீர்க்கதரிசி உரைக்கையில் நீங்கள் மனம்பொருந்திச் செவிகொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள் ஏசாயா 1 : 19.கீழ்ப்படிதல் என்பது கட்டாயமாக அல்ல. மாறாக ஒவ்வொருவரும் தனிப்பட்ட உந்துதலோடு தேவன் பேரில் உள்ள அன்பால் அப்படி செய்ய வேண்டும். ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் யோவான் 8 : 51 .அவர் நித்திய ஆக்கினையை குறிப்பிடுகிறார். பரலோக பாக்கியத்தை பற்றி நித்திய ஜீவனுக்கான ஆசீர்வாதத்தை பெற அவருக்கு கீழ்படிவோம்.

## கீழ்படிதலின் உதாரணங்கள்

வேதாகமத்தில் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர்களின் வாழ்க்கை நமக்கு மிகவும் தூண்டுதலாக இருக்கிறது. ஆபிரகாமை தேவன் அழைத்த போது அவருடைய சொல்லுக்கு கீழ்ப்படிந்து தான் போகும் இடம் என்னவென்றே தெரியாமல் தன் சொந்த வீட்டையும் தேசத்தையும் விட்டு புறப்பட்டார். அதேபோல தன் ஒரே புத்திரனை பலியிடும்படி காலமே எழுந்து புறப்பட்டான் ஆதி 22 :1 -18 பவுல் சுவிசேஷகராக அழைக்கப்பட்டபோது நான் பரமதரிசனத்திற்கு கீழ்படியாதவனாக இருக்கவில்லை என்கிறார் அப் 26 : 19 .நோவா பேழையை கட்டும் போது தேவன் தனக்கு கட்டளையிட்டபடி எல்லாம் செய்து முடித்தான். (ஆதி 6 : 22) அந்த கீழ்ப்படிதல் தான் இரட்சிப்பை கொண்டு வந்தது, ஆம் அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.(பிலி 2 : 8) பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார் லூக் 22 : 42. நாமும் கூட இப்படியே ஜெபிக்க பழகிக்கொள்ள வேண்டும்.

## கீழ்படியாமையின் விளைவு

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கிணை வரும். தேவன் இஸ்ரவேலரிடம் உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்கு நீங்கள் கீழ்ப்படியாமற்போவதினால், கர்த்தர் உங்களுக்கு முன்பாக அழித்த ஜாதிகளைப்போல நீங்களும் அழிவீர்கள் உபா 8 : 20 . பவுல் அநீதியின் விளைவை குறிப்பிடுகிறார். கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. இப்படிப்பட்டவைகளி னிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; எபேசியர் 5 : 5 - 6.

கீழ்ப்படியாமை நித்திய ஆக்கினையான மரணத்திற்கு வழிவகுக்கும். மாம்சத்தின் கிரியை படி நாம் வாழ்ந்தால் முடிவு நரகமே.

## பலியிடுவதை காட்டிலும் கீழ்ப்படிதலே உத்தமம்

சவுலின் கீழ்படியாமையினாலே அவனுடைய ராஜாங்கத்தை தேவன் அவனிடம் இருந்து பிடுங்கிப் போட்டார் 1 சாமு 15 : 1 - 23இல் சொல்கிறது கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றாமல் அமலேக்கியரோடு செய்த யுத்தத்தில் நலமானவைகளை சவுல் தனக்கென்று வைத்துக் கொண்டான். சாமுவேல் தீர்க்கதரிசி சவுலிடம் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் மாடுகளின் சத்தம் என்ன என்று கேட்டார். மேலும் பலியிடுவதை பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் என்றார். கர்த்தருடைய சத்தத்திற்கு சவுல் கீழ்ப்படியாமல் போனதினால் இஸ்ரவேலின் ராஜ்யத்தை தேவன் சவுலிடம் இருந்து புறக்கணித்து தள்ளினார்.

## கீழ்ப்படியாமையின் உதாரணங்கள்

1 இராஜா 13ல் கீழ்ப்படியாத ஒரு தீர்க்கதர்சி கர்த்தருடைய வாக்கை மீறி அப்பம் புசித்து தண்ணீர் குடித்ததினால் ஒரு சிங்கம் வழியிலே அவனுக்கு எதிர்ப்பட்டு அவனை கொன்று போட்டது. யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி தர்சீஷுக்கு கப்பல் ஏறினதால் பெரிய மீன் அவனை விழுங்கி போட்டது. கீழ்ப்படியாமைக்கு நாம் ஈடு செய்ய முடியாத விலை கொடுக்க வேண்டியதாயிருக்கும்.

## கீழ்படிதலோடு வாழுதல்

கீழ்ப்படிகிற பிள்ளைகளாய் இருந்து 1 பேதுரு 1 : 14 இல் குறிப்பிடுகிறார். அவருடைய கட்டளைகளை கைக்கொள்கிறவன் என்னில் நிலைத்திருக்கிறான். 1யோவான் 3 : 24 இயேசு தம் சீஷர்களிடம் நீங்கள் உலகமெங்கும் போய் நான் உங்களுக்கு கட்டளையிட்டவைகளை கைக்கொள்ளும்படி (மத்தேயு 28 : 19 - 20) முழுமையற்ற கீழ்ப்படிதல் விழுந்து போகும். நீங்கள் எல்லாவற்றிலும் கீழ்படிந்து இருக்கிறீர்களோ என்று உங்களை சோதித்து அறியுங்கள் (2 கொரி 2 : 9) மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப் 5 : 29).

## சுயபரிசோதனை

எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? ரோமர் 6 : 16 . நாம் யாருக்கு கீழ்படிகிறோம்? நம்முடைய எஜமான் யார்? சுயத்தை வெறுத்து கர்த்தரிடத்தில் முற்றிலுமாய் நம்மை அர்ப்பணிப்போம். தாவீதை போல கற்பனைகளைக் கைக்கொள்ளும்படி, தாமதியாமல் தீவிரித்தேன் சங்கீதம் 119 : 59 - 60. எல்லாவிதத்திலும் நம் கீழ்படிகிறோமா ? அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல 1 யோவா 5:3 . அதுவே உனக்கு சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் நித்திய ஜீவனையும் பெற்று தரும். ■

# கேள்வி ?

# பதில்!

**கேள்வி ? : எபி 5: 8 ல் சொல்லப்பட்டுள்ள கீழ்படிதலைக் கற்றுக் கொள்ளுதல் என்பது எதைக் குறிக்கிறது?**

எபி 5 : 8 - 9 அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, 9. தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி.

கற்றுக் கொள்ளும் கீழ்ப்படிதல் என்பது இயேசு கீழ்ப்படியாதவராய் இருந்து பின்பு கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் என்று அர்த்தமில்லை. இயேசு கிறிஸ்து ஆவியிலும், மாம்சத்திலும் பூரண பரிசுத்தராய் இருந்தார். ஆபிரகாமின் வித்தாகிய தாவீதின் சந்ததியிலே தேவனாகிய கர்த்தர் மாம்சத்தில் வெளிப்பட்டார். அவருக்கு நம்மைப் போல பாடுகள், சோதனைகள், வருத்தங்கள் எல்லாம் இருந்தது ஆகையால் அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தராகினார்.


இயேசுவிடம் தெய்வீக தன்மையும் மனுஷீகத் தன்மையும் ஒன்றாக இருந்தது, தன்னுடைய மனுஷீக சுபாவத்தில் கீழ்படிந்தார். பூமிக்குரிய அவருடைய பெற்றோருக்கும் பரலோக தகப்பனுக்கும் அவர் கீழ்ப்படிந்திருந்தார்.



அந்தக் கீழ்ப்படிதல் மாம்ச போராட்டங்களுக்கு மத்தியில் தான் இருந்தது. இயேசு ஜெபிக்கையில் இந்த பாத்திரம் என விட்டு நீங்க கூடுமானால் நீங்கட்டும் ஆயினும் என் சித்தத்தின்படி அல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டும் என்றார்.பிலிப்பியர் 2 : 8 அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். கீழ்ப்படிதலானது பல அனுபவங்கள் மற்றும் பழக்கவழக்கங்களால் வருகிறது. பழுதற்ற பலியாக தமைத்தாமே மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கும், சிலுவையின் மரண பரியந்தம் தம்மைத் தாழ்த்தினார். அவருடைய மகிமையான உயிர்த்தெழுதலினால், அவர் சம்பாதித்தீந்த இரட்சிப்பு விலையேறப்பெற்றது. ■

## தேவனுக்கேற்ற கீழ்ப்படிதலில் வளர்த்தல்

பெற்றோருக்கு கீழ்ப்படிதல் தேவனுக்கு கீழ்ப்படிய வழிகாட்டும்.



இன்றைய காலகட்டத்தில் கீழ்படியாமையும், புறக்கணித்தலும் எல்லா அதிகார வரம்புகளிலும் காணப்படுகையில் பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற கீழ்ப்படிதலில் வளர்ப்பது என்பது சவாலான ஒன்று. கடைசி நாட்களில் 2 தீமோ 3: 1, 2ல் பெற்றோருக்கு கீழ்ப்படியாத பிள்ளைகளை காண முடியும். இது தேவனுக்கு கீழ்படியாத வர்களாய் பின் நாட்களில் அவர்களை மாற்றி விடும். பிள்ளைகளுடைய ஆவிக்குரிய பயணத்தில் பெற்றோரின் பங்கு மிக முக்கியமானது. எபேசியர் 6 : 4 ல் கர்த்தருக்கேற்ற போதனையிலும், சிட்சையிலும் பிள்ளைகளை வளர்ப்பீர்களாக. பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து அவர்களை கனம் பண்ண கற்றுக் கொள்ளும் போது, கர்த்தருக்கு கீழ்படியவும் கர்த்தரை கனப்படுத்தவும் கற்றுக்கொள்வார்கள். கனமும், கீழ்ப்படிதலும் வீட்டிலே கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். பெற்றோரை கனம் பண்ணும் பிள்ளைகள், வெளியிலும் மற்ற அதிகாரங்களை உடையவர்களை கனம்பண்ணவும் தெரிந்து கொள்வார்கள். சகல விதமான அன்போடும் சிட்சையோடும் பிள்ளைகளுக்கு நல்லொழுக்கங்களை பழக்குவிக்க வேண்டும். 2 வயது குழந்தை தவறு செய்யும் போது கண்டிக்க படாவிட்டால் அதன் சுபாவம் அதையே திரும்பச் செய்ய பழகிவிடும். யாருடைய தலையீடும் இல்லா விட்டால் வளர்ந்து பெரியவன் ஆனாலும் குழந்தை மற்றவர்களை மதிக்கும் நல்ல பழக்கத்தை ஏற்றுக் கொள்ளாது. தான் பழகும் ஆசிரியப் பெருமக்கள், வழி காட்டிகள், சட்டப்பூர்வ அதிகாரம் படைத்தவர்கள் ஏன் தேவனையும் கனம் பண்ண அவர்கள் பழகுவதில்லை. ஒரு பெற்றோராக இதை சரி செய்வது உங்கள் கடமை நல்லொழுக்கம் என்பது வாய்ப்பு அல்ல திருத்தி சரி செய்யப்பட வேண்டியது. நம்பிக்கையும் அன்பும் எதிர்பார்ப்பும் ஒரு குழந்தை கீழ்ப்படிதலுடன் வளர வழி வகுக்கும். தேவனாகிய கர்த்தருடைய வல்லமையும் அதிகாரத்தையும் தன் வாழ்நாள் முழுவதும் கீழ்ப்படிவது, பெற்றோருக்கு கீழ்ப்படிவதில் இருந்தே அடித்தளமாக பிள்ளைகள் கற்றுக் கொள்கின்றனர். இளம் வயதிலிருந்தே பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற கீழ்ப்படிதலில் வளர்க்கும் பெற்றோரே தேவனுடைய சித்தத்தை செய்கிறவர்கள்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

# திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.
- 2 தீமோ 4 : 2

பவுல், விசுவாசத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறதாவது, எல்லா நீடிய சாந்தத்தோடும், கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு என்கிறார். ஏன் இப்படிப்பட்ட உபதேசம் அவசியமாகிறது? வேறு என்ன பிரசங்கம் பண்ணப்பட வேண்டும். சுய நம்பிக்கை, சபை கோட்பாடுகள், மனுஷர்களின் கலாச்சாரம், கட்டுக்கதைகள், தவறான நம்பிக்கை இன்னும் பல... பவுல், தீமோத்தேயுவுக்கு வலியுறுத்தி சொன்ன காரியம். இன்றைய நாட்களில் போதகர்களுக்கு தேவையான ஒன்றாக எதிரொலிக்கிறது. உயிரூட்டும் தேவ செய்தியை பிரசங்கிக்கும் போது தான், பாவம் செய்த ஆத்துமா அநீதத்தினின்று நீங்கலாக்கப்படும் மனுஷனுடைய தத்துவங்களோ, வேறு எந்த அந்நிய கொள்கைகளோ, ஜனங்களை நித்திய ஜீவனுக்கு நேராக வழி நடத்தாது. உலக ஞானம் ஆத்துமாவின் தேவையை திருப்தி படுத்தாது.



இது ஏமாற்றும் பிரசங்கம் உண்மையாய் கிறிஸ்துவை தேடுகிற ஆத்மாக்களுக்கு சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிப்பதால் நன்மை உண்டாகும். நீங்கள் பிரசங்கிக்காவிட்டால் யார் பிரசங்கிப்பார்கள்? பலரும் இன்று தாம் தான் சார்ந்த சபையை பிரஸ்தாபிக்கிறார்கள் சிலர் மாத்திரமே அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆக்கப்பட்டு நித்திய நித்தியமாய் என்றும் வாழும் வாழ்வை தரும் இடுக்கமான வழியை குறித்து போதிக்கிறார்கள். பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கையில் நாட்கள் வரும் அப்போது அவர்கள் செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுயஇச்சைகளுக்கு ஏற்ற போதகர்களை தங்களுக்கு திரளாக சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்கு செவியை விலக்கி, கட்டு கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும்.

எப்படி பிரசங்கித்தாலும், சோதனையின் சூழ்நிலைகள் எழும் சிலர் சுயத்தை வெறுக்காத எளிதான கொள்கைகளை போதகர் போதிக்க வேண்டும் என விரும்புவார்கள். சிலர் கர்த்தரை ஏற்றுக்கொண்டு பாவத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதற்கேற்ற போதனைகளை விரும்புவார்கள். சிலர் உலக இச்சைகளுக்கேற்ப, மாம்சத்தின் படி நடந்தாலும், ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்கு வந்தால் போதும் என்று சொல்லக்கூடிய போதகர்களைத்தான், விரும்புகிறார்கள். எனக்கு அன்பான போதகப் பெருமக்களே திருவசனத்தை ஜாக்கிரதையாய் பிரசங்கம் பண்ணுங்கள். சிலர் சில வார்த்தைகளை சேர்க்கவும் சில வார்த்தைகள் அதிலிருந்து எடுக்கவும் முயற்சிப்பார்கள். சிலர் தங்களின் சொந்த கொள்கைகளை திருவசனத்தின் ஆதாரத்தோடு ஒப்பிட்டு பார்ப்பார்கள் அப்படிப்பட்டவைகள் மனுஷனுடைய கோட்பாடுகள். பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, ஊழியத்தை ஞானமாய், பகுத்து, ஆராய்ந்து அறிந்து செய்ய உதவி செய்யும். கிறிஸ்துவின் சிலுவையில் எங்களை மறைத்துக் கொண்டு, வேத வசனத்தில் ஒன்றையும் கூட்டாமல் குறைக்காமல் போதிக்க கிருபை தாரும். எங்களை சுற்றி இருக்கும் சூழ்நிலைகள், நெருக்கங்களை பொருட்படுத்தாமல், உம்மில் நிலைத்திருக்க அருள் செய்யும் கிறிஸ்துவின் நல்ல உக்கிராணக்காரனாய் சுவிசேஷத்தை பரப்ப செய்ய உதவி புரியும். பவுலை போல சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் உத்தமமாய் வசனத்தை போதிக்கும்படி வழி நடத்தும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் ஜெபம்கேளும் நல்ல பிதாவே ஆமென். ■

CONTACT :-

**The Editor,
Gospel Truth,
P.O. Box - 54
Pollachi Town
INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**2 / 227 - Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**2 / 227, சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

SUNDAY SERVICE : 10 AM - **ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

**Come & Worship with Real Truth**

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 0091 95975 62641.
Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan
Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316